# *16. திருவருட்கடல்.*

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**உ**லகடங் கலும்பணி யிறையவன் சேவைய
தொழிந்துளர் பணும்வினைப் பலனைத்
தலமிசை யனுபவித் தாயினும் பரிகரித்
தாயினுஞ் சரிசெய வேண்டும்
இலையெனி னதுபினைப் பவத்துறு மெனவிர
ணியன்முளை சொனநடுப் படியுன்
நலனுடைச் சேவை யிலாதுயும் வழியெங
னான்றொழுந் திருவருட் கடலே. 1

**ந**ன்னெலைக் கவர்ந்துவைக் கோல்விடுத் திடலென
ஞானநூற் பொருளினைக் கிரகித்
தந்நெறி நூல்விடுத் தாரிய னுரைப்படி
யனுதினஞ் சாதனை புரிந்துன்
இன்னரு ளடைந்தன ரறிஞரெல் லாருமிங்
கிழிநசை சூழ்ந்துகெட் டேனான்
முன்னிய வணமினி முயங்கிநல் லருள்செயென்
முழுமுதற் றிருவருட் கடலே. 2

**ஆ**ரிய னுவற்சிநம் பாதசந் தேகமு
மகிலமு மாக்கையு நாமென்
றோரிடை யூறற விழைவிப ரீதமு
முறழ்வுடைப் பொருண்மறைத் துளமா

1. இரணியன்முளை சொன்னதாக வரூஉ நடு - **சைவபுராண ஞானசங்கிதையிற்** சொல்லப்பட்டுளது, முளை = மகன், நடு = நியாயம்.

3. இத்திருப்பாட்டிற் சந்தேகம், விபரீதம், அஞ்ஞானமென்னு மூன்று மொழிந்தக்காற் றிருவருளின்பத்தை யடையும்வழி யுண்டாமென்பதும், அச்சந்தேகம் ஆசாரிய வசனத்தை நம்பாமையா மென்பதும், பௌதிகவுலகு முடம்புமே ஆன்மாவாகிய நாமென விழைதல் விபரீதமென்பதும், ஆன்மவறிவை மறைத்துள்ள விருளே அஞ்ஞான மென்பதும் வெளிப்பட்டன. சந்தேகம், உள்ளுறைவாகவு மிருத்தல்கூடு மாகலின் அத்தன்மையுடைச்

காரிரு ளானது மிலையெனி னுனதருட்
　　களியினை யடைவழி யுண்டாஞ்
சீரிய நடையிலெற் கெதுவரு மடியனைத்
　　தெருட்டுநற் றிருவருட் கடலே. 3

**த**ந்தைதாய் மனைமக வாதிய ரியாதொரு
　　தருணமை விழிமறை வாயின்
சிந்தைதான் வருந்தியம் பகத்தலர் வடிப்பரித்
　　திணைக்கொரு மூலமா யாதி
அந்தமே யில்சிவ மறைந்துள நிலைகுறித்
　　தழுகிலர் நரரிதை யாயின்
நிந்தைசான் மடமையென் றாமிதைக் கடந்துய்ய
　　நினைவுசெய் திருவருட் கடலே. 4

**ஆ**ண்டைய ராயுளொர் நூற்றினு மேலிலை
　　யதிலரைக் கூறுநித் திரைக்காங்
காண்டிற மதிற்பதி னைந்திள மையிற்போங்
　　கதிகிளர் சரைக்குமவ் விதம்போந்
தூண்டுமற் றிருபதி னோய்முத லானவை
　　தொடர்வுறு மிதற்குளெண் ணறுநூல்
ஏண்டர வுணர்வதெங் கறிவதெங் கடைவதெங்
　　கெனைக்கொளுந் திருவருட் கடலே. 5

**உ**ரியவ ரவைபுகுந் தமிழ்துறழ் கேள்வியி
　　னுருசிநன் கறிந்துய்யு மேதைப்
பிரியமின் றளியென வாய்ருசி யறிந்துயிர்
　　பிழைத்தலி னின்றுமெய் விடுதல்

---

சீடனை ஆசாரிய னேன்றுகோடல் கூடாது, ஆசாரியன் அடிக்கினும், உதைக்கினும், ஏசினும் பொறுத்துக்கோடல், நீங்காதுநிற்ற லென்னுஞ் சாந்தமும் பரிவு முடையானே உத்தமசீடனாவன். ஏசப்படன் முதலிய நிகழ்ச்சிக்குப் பின்னர்த்தான் சிலருடைய உண்மைக்குணம் வெளிப்படூஉ மென்பதும் இவ்வுலகமறிந்த வுண்மைகளுளொன்றாம், அறிந்துகொள்க.

4. **அம்பகத்தலர்** = கண்ணீர்.

5. **ஆண்டையர்** = மனுடர்; **சூ - நிகண்டு.**

பரிநல னாகலி னுரியவர் வதியொரு
பதியிடை யனுதின மிருத்தி
அரியவு னருட்கெனை யீதிபின் கோடியென்
னாதரத் திருவருட் கடலே. 6

**ஆ**ணவ திமிரமு மாயையந் தீபமு
மகவினை மலமயக் கறிவுங்
காணுயி ரெனும்விழிக் கொளியருள் சிவமெனுங்
கதிரவ னுதித்தவிர் காலங்
கீணமுற் றருளினி லடங்கிடு முயிர்நலங்
கிளர்சிவ மதையடைந் திடுமிவ்
வேணமெற் குறுவதென் றுனக்கருள் புரிதுமென்
றிசைத்துள திருவருட் கடலே. 7

**கே**வல விருட்டினின் மாயையந் தீபமுங்
கிருத்திய மலமயக் குணர்வும்
மேவினின் றிடுமிஙன் குரம்பையம் மாயைசெய்
வினைகளொ ரிரண்டும்விண் ணுலகுந்
தீவிர வளறது மாமிவை களுமிருந்
திமிரமுங் கெடும்வண மருளை
ஈவிரை வென்றுறு முனையல தெவரரு
ளிகுக்குநர் திருவருட் கடலே. 8

**உ**யிரினைக் கீழ்நிலை யரணிய தாகவு
முனதிருந் தாரக மனுவைச்
செயிரறு மேனிலை யரணிய தாகவுஞ்
சேர்த்துயர் மதன தியானம்

6. **ஆதரம்** = ஆசை.

8. இருளே **"இருட்டு"** எனப்பட்டது; (வாதவூரடிகளுக் குபதேசித்த படலத்தில்) "பற்றிய **விருட்டு** மல பக்குவம்" என்றார் **திருவிளையாடற் புராணத்தாரும். தீவிர அளறு** = கட்டத்தைத் தரத்தக்க நரகம்.

9. **அரணி** = ஞெலிகோல் = தீக்கடை கோல்.

அயர்பொழு தெழுமறி வாகிய கனலியவ்
வரணிமு ழுதுமதன் மயமாக்
குயிலுமொ ரருந்தொழி லளிசொன வாறெனைக்
கொளுமொரு திருவருட் கடலே. 9

இப்படி மிசைமிறை யேநித நான்புரிந்
திருப்பினு மென்னிறை யாமுற்
கெப்படி யேனுமென் றனைக்கொடுத் ததிலயிர்ப்
பிலையிலை யணைப்பதெப் படியோ
அப்படி யிழைப்பதுன் பாரமெந் தாயரு
ணாசலப் பெயரிய வொருவன்
செப்பருட் கவிப்பொரு ளேயெனை யாள்குக
தெய்வமே திருவருட் கடலே. 10